நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று (14.05.2023) நடைபெற்ற அரசு விழாவில் ஈராண்டு சாதனை மலரை வெளியிட்டு. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் சார்பில் ரூ.122.60 கோடி மதிப்பீட்டிலான 442 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி. 12.734 பயனாளிகளுக்கு ரூ.63.36 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார் மத்திய மண்டல காவல்துறை தலைவர் கார்த்திகேயன்,. திருச்சி சரக காவல்துறை துணைத் தலைவர் சரவண சுந்தர். மாநகர காவல் ஆணையர் திருமதி.எம்.சத்தியப்பிரியா.. மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் , சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், செ.ஸ்டாலின் குமார். ந.தியாகராஜன். எம். பழனியாண்டி. எஸ்.இனிகோ இருதயராஜ். சீ.கதிரவன். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜித்குமார். . மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.அபிராமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் தேவநாதன். திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) ரமேஷ்குமார். மாவட்ட ஊராட்சித் தலைவர் த.இராஜேந்திரன், மண்டலத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் மாவட்டத்தில்

கள்ளச் சாராயம் அருந்தி உயிரிழந்த குடும்பத்தினருக்கு தலா ரூ.10 லட்சம் நிதியுதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு! காவல் துறை ஆய்வாளர்கள் பணியிடை நீக்கம்!

சென்னை, மே 15 - விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளச்சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் அருகே எக்கியார் குப்பத்தில் கள்ளச் சாராயம் அருந்தியதால் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சுரேஷ், சங்கர் மற்றும் தரணிவேல் ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையும், அதிர்ச்சியும் அடைந்தேன்.

கள்ளச்சாராயம் மற்றும் போதைப்பொருட்களை முற்றிலும் ஒழிக்க இந்த அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வரும் நிலையில், இச்சம்பவம் நடைபெற்ற பகுதியைச் சேர்ந்த மரக்காணம் காவல்நிலைய ஆய்வாளர் அருள்வடிவழகன், உதவி ஆய்வாளர் தீபன், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு ஆய்வாளர் திருமதி.மரியா சோபி மஞ்சுளா மற்றும் உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் ஆகியோர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தில் கள்ளச்சாராயம் விற்பனை செய்த அமரன், த/பெ.வேணு கைது செய்யப்பட்டுள்ளார். இதில் தொடர்புடைய இதர குற்றவாளிகளைத் தேடும் பணியும் விரைவு படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இச்சம்பவத்தில் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளித்திட அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் மற்றும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா பத்து இலட்சம் ரூபாயும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

திருச்சி மாவட்டத்தை நம்பர் 1 மாவட்டமாக ஆக்குவோம்!

அரசு விழாவில் அமைச்சர் கே.என்.நேரு உறுதி!

திருச்சி, மே 15 -

திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார் தலைமையில் ,நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு முன்னிலையில் தமிழ்நாடு அரசு ஈராண்டு சாதனை மலர் வெளியீட்டு நிகழ்ச்சி , பல்வேறு திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, அரசு நல திட்டங்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

அதில், ஊரக வளர்ச்சித்துறையின் கீழ் 10கோடியே 5 லட்சம்63 ஆயிரம் மதிப்பிட்டில் முதலமைச்சரின் கிராமசாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கிழ் 125 சாலை அமைக்கும் பணிகள்

6கோடியே 43 லட்சம் மதிப்பிட்டில் 39 புதிய மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் அமைக்கும் பணிகள் ஊரக வளர்ச்சித்துறையின் கீழ் 13கோடியே 6லட்சம் மதிப்பிட்டில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் கீழ் 230 வைப்பறையுடன் கூடிய புதிய சமையலறை கட்டும் பணிகள் ஆதிதிராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 3கோடியே 6லட்சம் மதிப்பீட்டில் 48 குடியிருப்பு மேம்பாட்டு பணிகள் ஆகமொத்தம் 12கோடியே 2லட்சத்து 60ஆயிரம் 63 மதிப்பீட்டில் 442 பணிகளை தொடங்கி வைத்தார்.

மேலும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் ஒரு பயனாளிக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி 50 ஆயிரமும், 2000பயனாளிகளுக்கு ரூ. 20கோடி 18லட்சத்து 72ஆயிரம் மதிப்பீட்டில் வீட்டுமனை பட்டாவும், சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் 156 பயனாளிகளுக்கு 18 லட்சத்து 72 ஆயிரம் மதிப்பீட்டிலான ஓய்வூதியம், ஆக மொத்தம் ரூ. 20கோடியே 18லட்சத்து 72 ஆயிரம் மதிப்பீட்டில் 2156 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

ஆக மொத்தம் ரூ.63 கோடியே 36லட்சத்து 21ஆயிரம் மதிப்பீட்டிலான திட்டப்பணிகள் தொடங்கி வைத்து,12 ஆயிரத்து 734 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்..

இதில் அமைச்சர் கே.என் நேரு பேசியதாவது:-

திருச்சி நம்பர் 1 மாவட்டமாக அமைய எங்களுடைய பங்கு மட்டும் அல்ல அதிகாரிகளான உங்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு. நாங்கள் திட்டம் தீட்டுவது பெரிதல்ல அதனை செயல்படுத்துவது அதிகாரிகளான நீங்கள் தான்.

மாவட்ட ஆட்சியர் மற்றும் அரசு துறை அதிகாரிகள் எடுக்கும் முயற்சி,முடிவு தான் நாட்டு மக்களுக்கு நல்லதாக அமைகிறது. திருச்சி மற்றும் சேலத்தை எனக்கு தந்து இருக்கிறார்கள் மிக சிறப்பாக இந்த மாவட்டத்தை நான் உருவாக்கி தருவேன் என உறுதி கூறுகிறேன்.

ஓராண்டு காலத்தில் மிக பெரிய அரங்கம் ஒன்றை இந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஏற்படுத்த உள்ளோம். 10 ஆண்டு காலம் வேறு ஆட்சி இருந்தது ஆனால் தற்போது முதல்வரின் செயல்பாடை பாருங்கள். நேரடியாக அவர் உங்களை சந்திக்கின்றார்.

நான் உங்களிடம் கேட்பது ஒன்றே ஒன்று மட்டும் தான் உங்களுடைய அன்பும் ஆதரவும் எப்போதும் முதலமை ச்சருக்கு இருக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.என். நேரு கூறினார்.

இதில் மாநகராட்சி மேயர் அன்பழகன், திருச்சி மண்டல காவல்துறை தலைவர் கார்த்திகேயன், திருச்சி சரக காவல் துறை துணை தலைவர் சரவண சுந்தர், மாநகர காவல் ஆணையர் சத்திய பிரியா, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சுஜித் குமார் ,சட்டமன்ற உறுப்பினர்கள் காடுவெட்டி, தியாகராஜன்,

பழனியாண்டி, சௌந்தர பாண்டியன், இனிகோ இருதயராஜ், கதிரவன்,மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க ஆலோசனைக் கூட்டம்

மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை 16.5.2023 மாலை 04:00 மணிக்கு, திருவள்ளூர் அடுத்த காக்களூர் பைபாஸ் சாலையில் உள்ள ஆர்.எம்.கே கெஸ்ட் ஹௌசில் திருவள்ளூர் மத்திய மாவட்ட அவைத்தலைவர் மா.ராஜி தலைமையில் நடைபெறுகிறது. மேலும் இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ. கிருஷ்ணாசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜே.ரமேஷ், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபால், காயத்ரி ஸ்ரீதரன், மாவட்டப் பொருளாளர் நரேஷ் குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், கு.விமல் வர்ஷன், எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள் மற்றும் இக்கூட்டத்தில் மாநகர ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இக்கூட்டத்திற்கு முன்னதாக திருவள்ளூர் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஆர்.ஜெயசீலன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

பொருள்:

1. முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா
2. கழக ஆக்கப் பணிகள் குறித்து

ஆவடி சா.மு.நாசர்
செயலாளர்
திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி காஞ்சிபுரம் தெற்கு ஒன்றிய பொது உறுப்பினர் கூட்டம் மற்றும் பாக நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் ஒன்றிய அவைத் தலைவர் கன்னியப்பன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் சிறப்புரையாற்றினார். உடன் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி பூத் கமிட்டி பார்வையாளர் ஜெ.பச்சையப்பன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், ஒன்றிய செயலாளர் க.குமணன் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கிளை நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

திருவண்ணாமலை காந்திநகர் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்க்கை வரலாற்று புகைப்பட கண்காட்சியினை, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், திரைப்பட நடிகர் ஜெயம்ரவி திறந்து வைத்தார். உடன் சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, த.வேணுகோபால், எம்.எஸ்.தரணிவேந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர் 'பா.முருகேஷ், டாக்டர் எ.வ.வே. கம்பன், சி.என்.அண்ணாதுரை எம்.பி, இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, எஸ்.அம்பேத்குமார், பெ.சு.தி.சரவணன், ஒ.ஜோதி, ப.கார்த்திவேல்மாறன், எஸ்.பன்னீர்செல்வம், ப்ரியா விஜயரங்கன் உட்பட பலர் உள்ளனர்.

திருவண்ணாமலையில் பிரமாண்ட ஏற்பாடு! முதல்வர் மு.க.ஸ்டாலின்

70 ஆண்டுகால வாழ்க்கை வரலாற்று புகைப்படக் கண்காட்சி!

அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் திரைப்பட நடிகர் ஜெயம்ரவி திறந்து வைத்தார்!

திருவண்ணாமலை, மே.15-

திருவண்ணாமலையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 70 ஆண்டுகால பொதுவாழ்வு புகைப்பட கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. அக்கண்காட்சியினை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், திரைப்பட நடிகர் ஜெயம் ரவி திறந்து வைத்தார்.

திருவண்ணாமலையில், 11.05.2023 வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு, காந்திநகர், பைபாஸ் சாலையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 70 ஆண்டுகால பொதுவாழ்வு பயண புகைப்பட கண்காட்சி, தூய்மை அருணை அமைப்பு சார்பில் திறப்புவிழா நடைபெற்றது.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினின் 70வது பிறந்தநாளை முன்னிட்டு, அவரது பொது வாழ்வு பயண புகைப்பட கண்காட்சி சென்னையில் தொடங்கி பல்வேறு மாவட்டங்களில் நடத்தப்படுகிறது. அதன்படி திருவண்ணாமலை காந்திநகர் பைபாஸ் சாலை திடலில் குளிர்சாதன வசதியுடன் கூடிய பிரமாண்ட அரங்கத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த புகைப்பட கண்காட்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை இளம் தலைமுறையினர் முழுமையாக அறிந்து கொள்ளும் வகையில் புகைப்படங்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. முதல்வரின் அரசியல் மற்றும் பொதுவாழ்க்கையில் அவர் சந்தித்த சவால்கள், மேற்கொண்ட போராட்டங்கள், சிறைவாழ்க்கைத் துயரங்கள் ஆகியவற்றை அறிய பல புகைப்படங்கள் மற்றும் இயல்பான சிற்பக் காட்சி வடிவங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. தூய்மை அருணை இயக்கம் சார்பில், அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விழாவிற்கு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தலைமை வகித்தார்.

சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ் செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை எம். எஸ்.தரணிவேந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் கலந்து கொண்டு முதல்வரின் பொதுவாழ்வு பயண புகைப்பட கண்காட்சி அரங்கத்தை திரைப்பட நடிகர் ஜெயம்ரவி திறந்து வைத்து பார்வையிட்டார்.

பின்னர் அங்கிருந்த பார்வையாளர்கள் குறிப்பேட்டில், தமது கருத்துக்களை பதிவிட்டு கையெழுத்திட்டார்.

ஜெயம் ரவி பேட்டி!

அதனைத் தொடர்ந்து நடிகர் ஜெயம்ரவி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:

இந்த புகைப்பட கண்காட்சியை திறந்து வைத்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சி. இதனை சிறப்பாக கொண்டு வந்ததற்கு நன்றி. இதுவரை வேறு எங்கும் நான் பார்த்ததில்லை. ஒரு வரலாற்றை ஒரு திரைப்படம் போல நம் கண்முன்பே கொண்டுவந்து காட்டியுள்ளனர். ஒரு சகாப்தத்தை நம் கண் முன்பு காட்டியுள்ளனர். முதல் வராகும் முன்பே மேயராக இருந்த காலத்தில் அவர் ஆற்றிய பணிகள், முதல்வராக அவர் சாதனைகள், நாட்டை எப்படி பாதுகாக்கிறார் என்பதை எல்லாம் காட்சிப்படுத்தி உள்ளனர்.

இந்த ஆட்சியின் சிறப்புகள் அனைவருக்கும் தெரியும். என்னென்ன நல்லவிதமான மாற்றங்கள் நடந்து இருக்கிறது என தெரியும். இன்னம் நல்ல பல மாற்றங்கள் நடைபெற வேண்டும் என விரும்புகிறேன். இவ்வாறு செய்தியாளர் சந்திப்பின் போதுப் அவர் கூறினார்.

விழாவில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.வேணுகோபால், தூய்மை அருணை மேற்பார்வையாளர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, முன்னாள் நகர மன்ற தலைவர் இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், ஒ.ஜோதி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பார்வதி சீனுவாசன், தூய்மை அருணை மேற்பார்வையாளர்கள் ப.கார்த்திவேல் மாறன், ப்ரியா விஜயரங்கன், நகரமன்ற தலைவர் நிர்மலாவேல்மாறன், ஒன்றியக்குழு தலைவர்கள் கலைவாணி கலைமணி, பரிமளா கலையரசு, சி.சுந்தரபாண்டியன், பூ.அய்யாகண்ணு, அன்பரசி ராஜசேகர், தமயந்திஏழுமலை, சாந்தி பெருமாள், நகரமன்ற துணைத் தலைவர் சு.ராஜாங்கம் மற்றும் வியாபாரிகள் சங்கம், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், தன்னார்வலர்கள் சங்கம் மற்றும் பொதுமக்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேச்சுப்போட்டியினை தொடங்கி வைத்து திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ் சிறப்புரையாற்றினார்.

முன்னதாக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் எ.வ.வே.கம்பன் தலைமை உரை நிகழ்த்தினார். மாநில ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ஜே.கான்ஸ்டன் டைன் ரவீந்திரன் விளக்க உரை ஆற்றினார். திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 100க்கும் மேற்பட்ட கலை அறிவியல், பொறியியல், பாலிடெக்னிக் கல்லூரிகளில் இருந்து 350க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர். தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் 20க்கும் மேற்பட்ட தலைப்புகளில் பேச்சுப்போட்டிகள் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் பார்வதிசீனுவாசன், நகரமன்ற தலைவர் நிர்மலாவேல்மாறன், ஒன்றியக் குழு தலைவர் பரிமளாகலையரசன், அன்பரசி ராஜசேகர், ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் முன்னாள் நகரமன்ற தலைவர் இரா.ஸ்ரீதரன், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், எஸ். பன்னீர்செல்வம், ப்ரியா விஜயரங்கன், அருணை பொறியியல் கல்லூரி பதிவாளர் சத்தியசீலன், விஜியலட்சுமிரமேஷ், டி.வி.எம்.நேரு, அ.சிவக்குமார், ஆராஞ்சி ஆறுமுகம், வி.பி. அண்ணாமலை, த.ரமணன், க.சுப்பிரமணி, சி.மாரிமுத்து, த.செந்தில்குமார், கி.ஆறுமுகம், ஏழுமலை, மனோகர், அ.தண்டபாணி, க.பிரபாகரன், கு. பாலசுப்பிரமணி, மு.அன்பழகன், மங்கலம் பிரபாகரன், ஏ.ஏ.ஆறுமுகம், கு.கணேஷ், வெம்பாக்கம் சீனுவாசன், மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், ந.சீனுவாசன், இல.குணசேகரன், எம்.ஆர். கலைமணி, ராஜசேகர், ஒன்றியக்குழு துணைத்தலைவர் பாலசுப்பிரமணி துரைவெங்கட், ஆர்.வெங்கடேஷ், ஆ.தே.முருகையன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ் பேச்சுப்போட்டிக்கு நடுவர்களாக பேச்சருவி சபரி, முனைவர் சு.பிரேம்குமார், முனைவர் திலகம், ஆங்கிலத்திற்கு முனைவர்கள் ராஜீவ் காந்தி, கலைவாணி, மருதுபாண்டி ஆகியோர் பங்கேற்றனர். உதவி பேராசிரியர் ஷோபா நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார்.

நிறைவாக திருவண்ணாமலை ஒன்றியக்குழுத்தலைவர் கலைவாணி கலைமணி நன்றி கூறினார்.

முன்னதாக செல்லங்குப்பம் சுப்பிரமணி, தமிழிசை முருகன் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

புலவர் ஆடலரசு
மே 15 (2007)

பொதுக்கூட்ட மேடைகளைப் பட்டிமன்றமாக – கவியரங்கமாக – வழக்காடு மன்றமாக மாற்றி பல்வேறு கோணங்களில் கழக கொள்கைகளை நாட்டு மக்கள் ஏற்கும் வண்ணம் நகரங்களிலும், குறிப்பாக கிராம.ப்புறங்களிலும் ஆற்றலோடு உரையாற்றியவர்.

கழகக் கொள்கைகளைப் பரப்பும் முகத்தான் "தியாகம்" எனும் தலைப்பில் நாடகம் இயற்றி தாமே அதில் நடித்தவர்.

கழகம் நடத்திய போராட்டத்தில் ஈடுபட்டு காவல்துறையால் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

1997ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும்விழாவில் தலைமைக் கழகச் சார்பில், தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு "கலைஞர் விருது" வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.